# அக்டோபர் – 04 – புதன்

## புனித அசிசி பிரான்சிஸ்

**“எருசலேமே! நான் உன்னை மறந்தால் என் வலக்கை சூம்பிப்போவதாக! ”– தி.பா 137: 5**

## முதல் வாசகம் : நெகேமியா 2 : 1 - 8

மன்னர் அர்த்தக்சஸ்தாவின் இருபதாம் ஆட்சி ஆண்டில், நீசான் மாதத்தில் அவரது முன்னிலையில் திராட்சை இரசம் வைக்கப்பட்டிருந்தது. நான் திராட்சை இரசத்தை எடுத்து மன்னருக்குக் கொடுத்தேன். அப்பொழுது அவர் முன்னிலையில் நான் துயருற்றவனாய் இருந்தேன்.மன்னர் என்னைப் பார்த்து, ”ஏன் உன் முகம் வாடியுள்ளது? நீ நோயுற்றவனாகத் தெரியவில்லையே! இது மனவேதனையே அன்றி வேறொன்றுமில்லை” என்றார். நானோ மிகவும் அஞ்சினேன்.நான் மன்னரை நோக்கி, ”மன்னரே! நீர் நீடூழி வாழ்க! என் மூதாதையரின் கல்லறைகள் இருக்கும் நகர் பாழ்பட்டுக் கிடக்கும்போது, அதன் வாயில்கள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கும் போது, என் முகம் எப்படி வாடாமல் இருக்கும்?” என்றேன்.அதற்கு மன்னர் என்னை நோக்கி, ”உனக்கு என்ன வேண்டும்?” என்றார். அப்பொழுது நான் விண்ணகக் கடவுளிடம் வேண்டினேன்.நான் மன்னரைப் பார்த்து, ”நீர் மனம் வைத்தால், உமது பார்வையில் தயவு கிடைத்தால் என் மூதாதையரின் கல்லறைகளைக் கொண்டுள்ள யூதாவின் நகரைக் கட்டி எழுப்ப என்னை அனுப்பும்” என்று கூறினேன்.அப்பொழுது மன்னரும் அவர் அருகில் அமர்ந்திருந்த அரசியும் என்னைப் பார்த்து, ”உன் பயணத்திற்கு எத்தனை நாள்கள் ஆகும்? எப்பொழுது நீ திரும்பி வருவாய்?” என்று கேட்டனர். மன்னர் என்னை அனுப்ப விரும்பியதால் திரும்பிவரும் காலத்தை அவரிடம் குறிப்பிட்டேன்.மீண்டும் மன்னரைப் பார்த்து, ”உமக்கு மனமிருந்தால், நான் யூதாவை அடையும்வரை யூப்பிரத்தீசின் அக்கரைப் பகுதியிலுள்ள ஆளுநர்கள் எனக்கு வழிவிட வேண்டுமென மடல்கள் கொடுத்தருளும்.கோவிலின் கொத்தளக் கதவுகளுக்கும் நகர் மதிலின் கதவுகளுக்கும், நான் தங்கவிருக்கும் வீட்டின் கதவுகளுக்கும் குறுக்குச் சட்டங்கள் அமைக்கத் தேவையான மரங்களை எனக்குக் கொடுக்கும்படி மன்னரின் காடுகளுக்குக் காவலரான ஆசாபுக்கு மடல் கொடுத்தருளும்” என்றேன். கடவுளின் அருட்கரம் என்னோடு இருந்ததால், மன்னரும் அவ்வாறே கொடுத்தார்.

**பதில்பாடல் :** உன்னை நான் நினையாவிடில் என் நா
மேல் வாயோடு ஒட்டிக்கொள்ளும்

## நற்செய்தி : லூக்கா 9 : 57 - 62

அவர்கள் வழி நடந்தபோது ஒருவர் அவரை நோக்கி, ”நீர் எங்கே சென்றாலும் நானும் உம்மைப் பின்பற்றுவேன்” என்றார். இயேசு அவரிடம், ”நரிகளுக்குப் பதுங்குக் குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மானிடமகனுக்கோ தலை சாய்க்கக்கூட இடமில்லை” என்றார்.இயேசு மற்றொருவரை நோக்கி, ”என்னைப் பின்பற்றிவாரும்” என்றார். அவர், ”முதலில் நான் போய் என் தந்தையை அடக்கம் செய்துவிட்டுவர அனுமதியும்” என்றார்.இயேசு அவரைப் பார்த்து, ”இறந்தோரைப் பற்றிக் கவலை வேண்டாம். அவர்கள் அடக்கம் செய்யப்படுவார்கள். நீர் போய் இறையாட்சியைப் பற்றி அறிவியும்” என்றார். வேறொருவரும், ”ஐயா, உம்மைப் பின்பற்றுவேன் ஆயினும் முதலில் நான் போய் என் வீட்டில் உள்ளவர்களிடம் விடைபெற்று வர அனுமதியும்” என்றார்.இயேசு அவரை நோக்கி, ”கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல” என்றார்.

**தியானம்:** மிருகங்களையும் இயற்கையையும் அதிகமாக நேசிக்க, ஆண்டவர் இயேசுவைப் பின்பற்றிய அசிசி நகர் பிரான்சிஸ் எனப்படும் புனிதரை அன்னையாம் திருச்சபை இன்று நினைவுகூருகிறாள். நாம் அனைவருமே நமது மீட்பரும் ஆண்டவருமான இயேசுவைப் பின்பற்ற வேண்டுமென நற்செய்தி (லூக்கா9:57-62) தெரிவிக்கிறது. திருத்தூதர்கள் மற்றும் புனிதர்கள் இயேசுவைப் பின்பற்றியே, தங்களது வாழ்வை அமைத்தவர்கள். இயேசுவிடம் கற்றுக்கொண்ட விழுமியங்களையே அவர்கள் தாங்கள் வாழ்வியல் கோட்பாடுகளாக அறிவித்தார்கள். இயேசுவைப்பின்பற்ற விரும்புவோர் எப்படிபட்ட மனநிலையோடு இருக்கவேண்டும்? என்பதை “நரிகளுக்குப் பதுங்கு குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, ஆனால், மானிட மகனுக்கோ தலைசாய்க்கவும் இடமில்லை(லூக்கா 9:58) என்கிறார். நற்செய்தியின் (லூக்கா 9:57-62) பின்னணனியும் இதற்கு அடிகோலுவதனை அவதானிக்கலாம். இயேசுவைப் பின்பற்றும் உண்மையான அர்ப்பணத்தோடு நாம் வாழுகிறோமா? பல புனிதர்களை தாய்த்திருச்சபை நமக்குத் தந்திருக்கிறது. இந்தப் புனிதர்கள் இப்படியெல்லாம் வாழ முடியுமா? என்று, நாமே வியக்கும் அளவிற்கு வாழ்ந்தவர்கள். எமது சமகாலத்தில் வாழ்ந்த, புனித அன்னை தெரசா இதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு. ஏழை, எளியவர்கள் மீது அன்புகொண்டு, இவ்வாறான புனிதர்களால் வாழ முடிந்தது என்றால், எம்மால் ஏன் முடியாது?. நமது வாழ்க்கையில் நாம் இயேசுவை உண்மையிலேயே பின்பற்றுகிறோமா? நற்செய்தியில் கூறப்பட்டவாறு “நீர் எங்கே சென்றாலும் நான் உம்மைப் பின்பற்றுவேன்‘ (லூக்கா 9:57) எனப்படும் முக்கியமான சந்தர்ப்பம் வாழ்க்கையில் ஒவ்வொருவருக்குமே வரும். அந்த முக்கியமான தருணத்தை இழந்துவிட்டால் அது மீண்டும் கிடைக்காது. சிந்திப்போம். முன்மதியோடு நடப்போம்.